## சுருக்கம்

பள்ளிக் கல்வி - இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் – இந்திய உச்ச நீதிமன்றம் சிறப்பு அனுமதி மனு எண்.18227 மற்றும் 18228/2008-இல் வழங்கியுள்ள இடைக்காலத் தீர்ப்பாணையின் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (எஸ்2) துறை**

அரசாணை (நிலை) எண் 220

நாள் 10.11.2008
சர்வதாரி ஐப்பசி– 25
திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:-

1) அரசாணை நிலை எண் 447 கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை நாள் 16.07.1996
2) சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளை வழக்கு ரிட் மனு எண்கள் 6377, 8474 மற்றும் 10583/2007 தீர்ப்பாணை நாள் 4.2.2008
3) சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கு மேல்முறையீடு எண்.119/2008 மற்றும் 122/2008 தீர்ப்பாணை நாள் 14.5.2008
4) அரசு நே.மு.கடித எண்.28972/எஸ்2/2008-1 நாள் 26.9.2008
5) இந்திய உச்ச நீதிமன்றம் சிறப்பு அனுமதி எண் 18227 மற்றும் 18228 -இல் இடைக்காலத் தீர்ப்பாணை நாள் 20.10.2008

*****

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாவட்ட வேலை வாய்ப்பக பதிவு முன்னுரிமையின் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்கள் பணி நியமனம் மேற்கொள்வது குறித்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2) மாவட்ட வேலை வாய்ப்பகத்தின் மூலமாக இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் மேற்கொள்ள வகை செய்யும் அரசாணை (நிலை) எண்.447, நாள் 16.7.1996-னை எதிர்த்து வேலை வாய்ப்பற்ற இடைநிலை ஆசிரியர் நல அமைப்பினர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு உரிமை மனு எண்கள் 6377/2007, 8474/2007 மற்றும் 10583/2007 மூலமாக வழக்கு தொடுத்தனர்.

மேற்படி வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தனி நீதிபதி அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை அடுத்து வேலை வாய்ப்பற்ற இடைநிலை ஆசிரியர் நல அமைப்பினைச் சேர்ந்தவர்கள் சென்னை உயர்நீதிமன்ற, மதுரைக் கிளை நீதி மன்றத்தில் உரிமை மேல்முறையீடு (எம்.டி) வழக்கு எண் 119 மற்றும் 122/2008இன் கீழ் மேல்முறையீடு வழக்கு தொடுத்தனர். இந்திய அரசியலமைப்புச்சட்டம் விதி 16(2)இன் அடிப்படையில், இருப்பிடத்தின் அடிப்படையில் வேலைவாய்ப்பில் பாகுபாடு காட்டக்கூடாது என்ற நிலையை அடிப்படையாகக் கொண்டு இவ்வழக்கு ஏற்கப்பட்டு மாநில பதிவு மூப்பு அடிப்படை மற்றும்/பொது விளம்பரம் மூலமாக இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இவ்வழக்கில் 14.5.2008-ஆம் நாளன்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

த.பி.பா.,/2

3) இதனையடுத்து மேற்படி 14.5.2008-ஆம் நாளிட்ட தீர்ப்பாணையினை எதிர்த்து அரசால் உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு (Special Leave Petition) எண் 18227 மற்றும் 18228/2008-இன் கீழ் மேல்முறையீடு செய்யப்பட்டது.

4) பார்வை நான்கில் கண்ட 20.10.2008ஆம் நாளிட்ட உச்சநீதி மன்ற இடைக்கால தீர்ப்பாணையில் இடைநிலை ஆசிரியர் நியமனம் தொடர்பாக கீழ்க்கண்டவாறு தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

Having regard to the fact that a large number of vacancies in the State have remained unfilled, the State Government sought leave to fill the posts. On the submissions made, we make the following interim order, accepting the State's proposal:

"Appointment to the post of secondary Grade Teachers may be made by the State Government, by calling the list of eligible persons from all the District Employment Exchanges and by newspaper Public Advertisements throughout the State so that any willing candidate even though registered in different Districts can participate in the selection. It shall be made clear in the Public Advertisement that the selection would be based on the Employment Exchange seniority. It shall also be made clear that any person selected and appointed in a particular school within a District cannot aspire for or seek transfer to another school outside the District."

This aforesaid arrangement will apply for any recruitment to be made pending disposal of these appeals.

5) இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஆணையை எதிர்நோக்கி, மாநில அளவிலான இடைநிலை ஆசிரியர் பதிவு முன்னுரிமைப் பட்டியலை தயாரிக்குமாறு ஏற்கனவே பார்வை நான்கில் கண்ட அரசின் கடிதத்தில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

6) இந்நிலையில் சிறப்பு அனுமதி மனு எண் 18227 மற்றும் 18228/2008-இல் 20.10.2008ஆம் நாளிட்ட உச்ச நீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பாணையின் அடிப்படையில், 2007-08-ஆம் கல்வி ஆண்டிற்கான இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிடங்களை நிரப்ப வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரிடமிருந்து மாநில பதிவு முன்னுரிமை அடிப்படையிலான இடைநிலை ஆசிரியர் பட்டியலினை பெற்றும், மேலும் உச்ச நீதிமன்றத்தின் ஆணையினடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி இடைநிலை ஆசிரியர் பணி நியமனத்திற்கான நாடுநர்களை தேர்வு செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு அரசு ஆணையிடுகிறது.

(i) இடைநிலை ஆசிரியர் பணி நியமனத்திற்கான தகுதி உள்ளோர் பட்டியல் அனைத்து வேலை வாய்ப்பகத்திலிருந்தும் பெறப்பட வேண்டும். மேலும், மாநிலம் முழுவதும் பொது விளம்பரத்தின் மூலமாக விருப்பம் உள்ள நாடுநர்கள் வெவ்வேறு மாவட்டங்களில் பதிவு செய்திருந்தாலும் இடைநிலை ஆசிரியர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்க வகை செய்யப்பட வேண்டும். பொது விளம்பரத்தில் இடைநிலை ஆசிரியர் பணிக்கான தேர்வு வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக அறிவிக்கப்பட வேண்டும்.

(ii) உச்ச நீதி மன்றத்தின் ஆணையைக் குறிப்பிட்டு, தேர்வு செய்யப்படும் நாடுநர்கள் ஒரு மாவட்டத்தில் உள்ள பள்ளியில் பணியமர்த்தப்பட்ட பிறகு பிற மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு பணியிட மாறுதல் கோர இயலாது என பொது விளம்பரத்தின் மூலமாக திட்ட வட்டமாக அறிவிக்கப்பட வேண்டும்.

7) இவ்வரசாணையின் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப ஏதுவாக ஆசிரியர் தேர்வு வாரியத்துடன் இணைந்து இப்பணி சீரிய முறையில்

நடைபெற தக்க உதவிகளை வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அரசால் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தலைவர்,
ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6
வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-32
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை -6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை-5
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-9
சமூக நலத்துறை மற்றும் சத்துணவுத் துறை, சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை -9
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//